தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு : பிரசங்கங்கள் : : :

1933-34

கிழச்சிவற்பட்டி, அழகாபுரி.



திறப்பு விழாத் தலைவர்
ஸ்ரீமான்
தெ. கி. தெ. தேனப்ப செட்டியார்
அவர்கள்.



கொடியேற்று விழாத் தலைவர்
ஸ்ரீமான்
குழ. மெ. ராம. இராமநாதன் செட்டியார்
அவர்கள்.



வரவேற்புக் கழகத் தலைவர்
ஸ்ரீமான்
அ. அழ. சோக்கலிங்கம் செட்டியார்
அவர்கள்.



மகாநாட்டுத் தலைவர்
ரெவரெண்ட்
M. S. திருத்துவதாஸன் அவர்கள்.



மகாநாட்டுக் காரியதரிசி
ஸ்ரீமான்
சு. அ. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்.

உ

சிவமயம்

தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு

திறப்பு விழாத் தலைவர்

ஸ்ரீமான் தெ. கி. தெ. தேனப்ப செட்டியாரவர்கள்,

பிரசங்கம்

பெரியோர்களே! சகோதரி—சகோதரர்களே!

இளைஞர்கள் உடம்பும் - உள்ளமும் நலமடைந்திருத்தல் அவசியம். உடல் செம்மை பெறாது உள்ளம் நலமடையச் செய்யும் முயற்சி பெரும் பிரயோசனம் தராதென்பது உடற்கூறு சாஸ்திரிகளின் துணிபு. ஆகவே, உள்ளம் செம்மை அடைதற்கு- உடல் செம்மை நிலையில் இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அதற்காதரவு தேடும் இம்மகாநாட்டை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கின்றேன்.

அன்பர்களே!

நம் நாட்டின் தசையிலும் இரத்தத்திலும் பலம் குன்றிவிட்டது. மக்கள் உடல் வரட்சி அடைந்துவிட்டது. தற்கால இளைஞன் பலிஷ்டர்களான நமது முன்னோர்களின் நிழலாகவே இருக்கின்றான். இதற்கு ருசுத் தேவையில்லை. உண்மை அவ்வளவு விளக்கமாயிருக்கின்றது.

நமது சன சமூகத்தின் ஜீவசக்தி தற்காலம் தாழ்ந்திருப்பது போல வேறு எக்காலத்திலும் தாழ்ந்திருந்ததில்லை. நமது க்ஷீணம் இவ்விகிதத்தில் சென்றால், செழித்தோங்கும் பிறசன சமூகங்களுக்கிடையே நாம் இருந்து வாழ்வதற் கியலாதுபோம். மற்றெல்லாச் சமூகத்தினர்களும் நாளுக்கு நாள் உடல் வன்மையில் ஓங்கி

வருகிறார்கள். உடல் நலத்தை அவர்கள் தங்கள் உரிமையெனக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாமோ நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போகிறோம். அது நமது இலட்சிதமானால் அதைக் காட்டினும் பரிதாபம் நமக்கு வேறென்ன வேண்டும்.

உயர்தரப் பள்ளியில் வாசிக்கும் ஒரு மாணவனைப் பாருங்கள். சாதாரணக் கல்லூரி மாணாக்கனைப் பாருங்கள். அவன் படிப்பு முடிந்து, முதுகந் தண்டில் பலமற்று, எலும்புந் தோலுமாய், வயிற்றுக் கோளாறுகளுடன் வெளியே வருகிறான். அவனுடைய தேக நலனுக்கான தக்க அஸ்திவாரம் பள்ளியில் கிடைக்கவில்லை. அவனுடைய மூளைமட்டும் மிதமிஞ்சிய வேலையினால் கசக்கிப் பிழியப் படுகிறது. மூளையின் பலம் பெரிதுதான். அது உயர்ந்தது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அதனைப் போற்றுதற்கான திடகாத்திரம் ஒருவருக்கு இல்லையாயின் அதனால் என்ன பயன்? தேகமனோசக்திகள் சமநிலைபெற முயற்சிக்கும் முறையே சிறந்ததாகும்.

இளைஞர்களுக்குத் தங்களுடைய செல்வத்தில் ஆசை யிருப்பதைவிட தங்களுடைய சுகசரீரத்தில் ஆசை அதிகம் வளரும்படி செய்தல் வேண்டும். அவர்கள் தங்களுடைய உடலை உறுதி செய்வதில் மிகுந்த கருத்துடையவர்களாயிருக்கும்படி கற்பிக்கவேண்டும். இளைஞர்களே பிற்கால சனசமூகம். அவர்கள் தங்களுடைய தேக சுகத்தைச் சாக்கிரதையாய்ப் போற்றிவரவேண்டும். அவர்கள் தங்களுடைய வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும் தேகவிஷயமாக அளவிலாச் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். கல்வி இலாகா அதிகாரிகள் இதில் முழுக்கவனம் செலுத்தாதிருக்கிறார்கள். அவர்கள் தீமை விளைக்கும் குற்றத்தை அலட்சியம் செய்தவராகிறார்கள். பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களா யிருப்பவர்கட்கும் இது பற்றிப் போதிய கவலை இல்லை. அவர்கட்கு தேகமனோ நிலையினை ஒழுங்கு பெறச் செய்யும் சிறந்த கல்வியில்லை. மேலும் அவர்கட்குத் தேவைகளைப் பூர்த்தி செய்து வைக்கும்படியான படிப்பில்லை. இம் முறைகளைப் பெறத்தகுந்த கல்வி நிலையங்களில் அவர்கள் பயிற்சி பெறவில்லை. இதனால் அவர்களுடைய தேகமனோ பலங்கள்

குறைவுடையதா யிருக்கின்றன. இத்தகைய ஆசிரியர்களிடத்தி லேயே மாணுக்கர்களின் கல்வி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

ஓர் பையன் தன்னுடம்பைப் பாதுகாத்துத் திடசரீரனுய் இல்லாவிட்டால், அவன் நன்கு கற்றறிந்து தன் சீவனோபாயத்திற்கு வேண்டிய வசதிகளைத்தேடி, முதலில் தன் குடும்பத்திற்கே நன்மை பயக்க யியலாது. இது பையன்களுக்கு மாத்திரமன்று; பெண் களுக்கும் மிக அவசியமே. உடல் நலச் செல்வத்தில் இருபாலரும் ஒத்த தன்மை எய்தினுல்தான் வாழ்வில் இன்பம் காணமுடியும். காலா காலங்களில் காரியங்களைச் செய்யவும், தேகத்திற்குப் பயிற்சி அளிக்கவும், பலவிதப் போட்டி விளையாட்டுக்களில் அக்கரை எடுத் துக்கொள்ளவும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும். அவர்கட்குத் தம் தேகத்தைப் பாதுகாத்து விருத்தி செய்வதே முதற் கடமை என்பதை வற்புறுத்தி உணர்த்த வேண்டும். தேகப் பயிற்சியைச் சரிவரக் கவனியாத கலாசாலை தம் கடமையைச் சரிவர நடத்து வதாகச் சொல்வதற்கில்லை.

உடற்பயிற்சிக்காக ஏற்படுத்தும் பலவித விளையாட்டுக்கள் மூலம் சிறுவர் - சிறுமிகளுக்கு விஷயங்களைச் சடுதியில் ஆராய்ந்து நடத்தும் சக்தியும், சில சந்தர்ப்பத்தில் நிர்ணயிக்கத்தக்க சக்தியும் கூட விருத்தியாகின்றன. சேவைக்கு மிக்க அத்யாவசியமான குணங் கள் பள்ளியில் பழகிவரும் உடற்பயிற்சி மூலம் விருத்தியாகின்றன. இன்னும் கீழ்ப்படிந்து நடத்தலும்,பொதுநன்மையை உத்தேசித்து தன் சொந்த சிரமத்தைக் கருதாதிருத்தலும், விடாமுயற்சியும் பயிற்சியால் ஏற்படுகின்றன. இப்பயிற்சிகளைத் தினப்படி பழகி வந்தால் தன்னையறியாமலே நன்னடத்தை போன்ற சாதனங்கள் உண்டாகின்றன. இன்னும் இப்பயிற்சிக்காக இளைஞர் பலர் ஒன்று கூடுங்கால், பலருடன் சரிசமானமாகப் பழகுவதற்கும், சகோதரத் வத்தை விருத்தி செய்வதற்கும் இடமுண்டாகின்றது. ஆகவே, உணவின் பாகுபாடுகளையும், ஆரோக்கிய மார்க்கத்திற்குரிய பல விஷயங்களையும், அதற்காதாரமான நன்னடத்தைகளையும் விருத்தி செய்து, உண்மையான ஆனந்தத்தை அடையும்படியான வழிகளை நன்கு எடுத்துக்காட்டி அறிவு புகட்டவேண்டியது அவசியம். இவ் விதம் செய்ய சாதாரணமாய்ப் பயிற்சிமட்டும் கற்பிக்கும் உபாத்தி

யாயர் போதாது. இவ்விஷயங்களின் உண்மை இயல்பை அறிந்து மனித இயற்கையை நன்குணர்ந்து, விசாலப் புத்தியுடனும் மெய்யன்புடனும், ஊக்கத்துடனும் பயிற்சி புகட்டவல்ல புத்திமான்களே தேவை.

சிசுப்பருவ முதல் ஆரோக்கிய நற்பழக்கங்கள் கற்பிக்கப்படாததால் வயதுவந்த பிறகும் அவர்கள் அதுபற்றிக் கவலை எடுத்துக் கொள்கின்றார்களில்லை. இத்தகைய கவலைக் குறைவால் அஸ்திவாரம் பலமற்றுப் போயிருக்கிறது. அல்லாமல் அது பழுதுபட்டுப் போனதாயு மிருக்கிறது. குழந்தைகளுக்குத் தேக ஆரோக்கியத்தில் தக்க பலம் முதலில் ஏற்படவேண்டும். அவர்களுடைய சிறிய மூளைகளில் பதியமுடியாத விஷயங்களும், அவைகளைக் கிரகிக்க முடியாத தன்மையும் ஏற்படுவதற்கு முந்தி அவர்களுக்கு உயர்ந்த தேகாரோக்கியத்தை உண்டுபண்ண வேண்டும். தேகசக்தியும் மனோசக்தியும் ஒருங்கே கவனிக்கப்படாவிட்டால், இடைப்போதில் தேகமும் மனமும் நாசமடைந்தேபோம். அவ்விருவிதக் கல்வியும் ஏற்ற அளவில் இல்லாதபோது மனதிற்கு மிதமிஞ்சிய வேலை ஏற்படுகிறது. அதனால் தேகம் சீர்குலைந்து வளர்ச்சியும் குன்றிப் போகின்றது.

இப்போது மேலை நாடுகளில் துப்பாக்கிகள், இயந்திரப் பீரங்கிகள், நவீன வெடிக்குண்டுகள் முதலியன புதிது புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளால் பலமற்ற மனிதன்—பலமுற்ற எதிரியை நன்கு தாக்கமுடியும். இக்காரணத்தால் சுமார் சென்ற முப்பது ஆண்டுகளுக்குமுன் அவர்களும் உடற்பயிற்சியில் போதிய கவனம் செலுத்தவில்லை என்று சரித்திர வாயிலாக நாம் அறிகிறோம். அப்படியிருந்தும் அவ்விடங்களில் தற்காலம் உடற்பயிற்சி கட்டாயமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆயுதங்களை உபயோகிக்க—திறமையுடன் சமர்புரிய—சோர்வில்லா நிர்வாகத்தினைப்பெற தேகதிடம் அவசியம் என்று கருதி, உடற்பயிற்சி கட்டாய பாடமாக்கப்பட்டு, சேனை வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருவது கண்கூடு. இது விஷயத்தில் மேலை நாட்டினரைத் தட்டி எழுப்பிக் கண்விழிக்கச் செய்தவர் "யூஜின் சாண்டோ" என்னும் பெரியார்தான் என்பதை எவரே மறுக்க முடியும். என்றாலும்

மேலே நாட்டினுள்ளும் ஒரு பகுதியார், உடற் பயிற்சியினால் பெறும் நலன்களால் எதிரிகளைத் தாக்குதல்—சகோதர மனிதர்களைக் கொல் லுதல் என்னும் இழிந்த நோக்கங்களை வெறுத்து, தம் சொந்த சனசமூகத்தின் முன்னேற்றத்திற்கு அப்பயிற்சியினாலாகிய பலன் களை உபயோகப்படுத்தி வருகின்றனர். அதுபோன்ற ஒரு திட் டத்தையே நாமும் அநுஷ்டிக்க வேண்டும்.

உடற் பயிற்சி பெற்று நாம் ராணுவத்திலா சேரப்போகின் றோம் எனக் கேட்கக்கூடியவர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவர் கட்கு மேலே எடுத்துக் காட்டிய உரைகள் பொருந்தும். எனினும் அதுபற்றி இன்னும் சிறிது கவனிப்போம். உடற்பயிற்சியின் முக்கிய நோக்கம் ஆரோக்கியம்—உடற்கட்டு—பலம் முதலிய இந்த மூன்றையும் பெறுதலேயாம். மனிதர் பூவுலகில் தோன்றிய காலந் தொட்டு, திடகாத்திர மனிதனே எக்காரியத்திலும் முதன்மையா யிருந்து சாதித்துக் கொள்ளுகிறான். இதற்கு ஏதாவது விலக்கு இருக்கலாமாயினும் பொதுவில் இது உண்மை யென்று யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆகவே, தேகம் அபிவிருத்தி அடைவதற்கு உடற்பயிற்சி மிக்க இன்றியமையாததாகும். பயிற்சி இல்லாவிடில் வளர்ச்சியும்—விருத்தியும் இருப்பதரிது. சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக, உபயோகத்தில் இல்லாத அவயவங்கள் நாளாவட்டத்தில் மழுங்கி மறைவதும், உபயோகத்தில் இருந்து வரும் அவயவங்கள் வலுத்து விருத்தியடைவதும் மிக முக்கிய மான உண்மை என்று தெரியவருகிறது.

இந்த உடற்பயிற்சி இயக்கம் ஒருவருக்குமட்டும் சொந்தமன்று; ஒரு சமூகத்தாருக்குமட்டும் சொந்தமன்று; மக்கள் வகுப்புக்கே சொந்தமானதாகும். இதில் நமக்குள்ள மெய்யான சிரத்தையைச் சாத்தியமான வரையில் கடந்த பலசாலிகள் மகாநாட்டின் மூலமும் வேறு விதத்திலும் காட்டி வந்திருக்கிறோம். இன்னும் காட்டு வோம். இதனால் கிடைக்கும் நலன்களைப் பொதுவாக மக்கள் எல்லோரும் அடைய வேண்டுமென்னும் உயரிய நோக்கத்தோடு நாம் வேலை செய்யவேண்டும். இம்மகா நாட்டில் காட்டும் சிரத்தை மட்டும் போதாது. இதன் உண்மைப்பயனை முதலில் இளைஞர்கள் அறியும்படியும்—அடையும்படியும் செய்தல் வேண்டும். அசௌக்

கியமான சரீரத்தில் ஆரோக்கிய மனப் பாங்கு அமைய இடமில்லை. சரீரதிடம் உடைபட்டால் சிறார்களின் கல்விப் பயிற்சி பலனளிக்காது. இதனை உண்மையாக உணர்ந்து செயலாற்றும் உபகாரிகள் சிலர்மட்டும் நமக்குக் கிடைத்துவிட்டால் நமது செல்வ அபிவிருத்திக்கு இடைஞ்சலான தீமைகளெல்லாம் விரைவில் நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

இந்த உடல் நலச் செல்வத்தை வித்தியாசமில்லாமல் மக்கள் எல்லோரும் பெறும்படியான வசதிகளைச் செய்தல் வேண்டும். இதற்குரிய ஸ்தாபனங்களை எங்கும் ஏற்படுத்தும்படி பிரசாரமூலம் கிளர்ச்சி செய்தல் வேண்டும். நம்முடைய தாய் நாடு முழுவதையும் அன்றி ஒவ்வொரு சிறிய குடிசையையும் ஆரோக்கிய விடுதிகளாய்ச் செய்தல் வேண்டும். இதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைத்தல் வேண்டும். அல்லாமல், இதற்கு மகாஜனங்களுடைய மனமார்ந்த ஒத்துழைப்பையும், உரிய உதவியையும் நாம் தேடவேண்டும். எதற்கும் நாம் தகுதியாக இருக்கும் வண்ணம் தேகப் பயிற்சியை மேன்மேலும் கவனிக்கவேண்டிய அவசியம் பற்றி அடிக்கடி வற்புறுத்துதல் வேண்டும். அதனை வற்புறுத்துவதே இம்மகா நாட்டின் நோக்கம் என்று கூறத்தேவை இல்லை. இம்மகா நாட்டைச் சாத்தியமாகச் செய்த ஊக்கம் மேன்மேலும் பொங்கி நாடெங்கும் பரவி பெருத்த நன்மை பயக்குமாறு வேண்டும் முயற்சிகளைச் செய்ய உங்களனைவரையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். சுபம்.



உ

சிவமயம்.

தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு

கோடியேற்று விழாத் தலைவர் ஸ்ரீமான்

குழ. மெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள்

பிரசங்கம்

பெரியோர்களே! எனது சமூக இளைஞர்களே!!

நமது ஸமூக இளைஞர்களுக்காக நடத்தப்படும் இம்மகாநாட்டுக்கு, கொடியேற்று விழாத் தலைவர் பதவியை ஏற்கவேண்டுமென்று இம்மகாநாட்டின் நிர்வாகஸ்தர்கள் என்னைக் கேட்டுக்கொண்டபோது நான் சிறிது தயங்கியதுண்டு. பேச்சில் மிக்காரும் அறிவிற் சிறந்தாருந்தான் இத்தகைய காரியம் செய்யக் கடமையுடையவர்கள் என்றெண்ணியதே அதற்குக் காரணமாகும். பிறகு விஷய முணரவே, இது மக்கள் கடமைகளில் முக்கியமானதும் — கால நிலையில் முதலாவதாகச் செய்யவேண்டிய தொன்றென்றும் அறிந்தேன் — இசைந்தேன் — உங்கள் முன் தோன்றினேன்.

இளைஞர்களே!

நீங்கள் இதனாலடையக்கூடிய நலன்களை ஒருங்கே பெற்று அறிவுடனும், திடத்துடனும், நீண்டாயுளுடனும் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து "உடலினை உறுதிசெய்" என்று பொறிக்கப்பெற்ற இக்கொடியினை ஏற்றுகின்றேன்.

இளைஞர்களே! செல்வச் சிறுமிகளே!!

உடலினைப் பாதுகாருங்கள் என்று இம்மகாநாடு நமக்கு வழிகாட்டுகிறது; தீய வழிகளில் நடந்து உடலுக்கும் உயிருக்கும் கேடு செய்யாதீர்கள் என்ற போதனையைச் செய்ய இம்மகாநாடு தோன்றி

யிருக்கிறது; வாழ்க்கையில் ஆரோக்கியம், பலம், தேகக் கட்டு நீண்டாயுள் முதலியன பிரதானம் என்பதை எடுத்துக்காட்ட இம்மகாநாடு முன்வருகிறது. உடற்பயிற்சி சிறந்தது, சுகவழி களில் தலையாயது, இதனை நமது சமூக மக்களும் கைக்கொண்டு நலம்பெற வேண்டும் என்ற உயர்ந்த உரைகளை ஊட்ட நமது சமூக இளைஞர்க்கென்றே இம்மகாநாடு காணப்படுகிறது; உடற் பாது காப்பை அலட்சியம் செய்யாதீர்கள், உடற் பயிற்சியின் மேன் மையை நன்குணருங்கள், அறிவு நலத்தில் சிறந்திருப்பதுபோலவே —உடல் நலத்திலும் சிறந்திருங்கள் என்ற உண்மையை விளக்க இம்மகாநாடு முற்படுகிறது. ஆகவே, இளைஞர்கள் இதனை உணர்ந்து, ஓர்ந்து, செயலில் கொணர்ந்து நலமடைய விழைகின்றேன்.

இளைஞர்களே !

எத்தகைய குபேர சம்பத்தை ஒருவன் அடைந்திருந்தபோதி லும் அவன் நோயில் வீழ்ந்து துன்புறும்போது அச்செல்வம் நோய்க்கு ஈடாவதில்லை. நோயுற்ற காலத்து, மக்கள் எச்செல்வத் தையும் விரும்புவதில்லை. எத்தகைய இன்பத்தையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. நோயின் துன்பமே அவர்கள்முன் மிகுந்து தோன்றும். அப்போது அதனைப் பரிகரிக்கவே அவர்கள் விரும்பு வார்கள். அதற்காக எதனைக் கொடுத்தேனும் அதனை விலக்க முற்படுவார்கள். ஒரு சாதனத்தாலும் பரிகரிக்க முடியாத நிலைமை யினை அடைந்து உலக வாழ்வைத் துறக்கும் அமைப்பில் நோய் மிஞ்சிவிட்டால் மக்கள் எதனால்தான் என்ன செய்ய முடியுமென் பதை இளைஞர்களே! சிந்தியுங்கள்! இங்கேதான் உங்கள் ஆழ்ந்த சிந்தனையை உபயோகிக்கவேண்டும். அவ்வித சிந்தனையை உபயோ கித்தற்கு இம்மகாநாடு வழிகாட்டியாயிருக்கிறது. இதன் மூலம் உடலுயிர்ப் பாதுகாப்புக்கான விஷயங்களில் சிறுவர்—சிறுமியர் எல்லோரும் கவனம் செலுத்துதல் வேண்டும். உடலைப் பாது காக்கவேண்டும் என்னும் கவனத்தைத் திருப்பவே இதுபோன்ற மகாநாடுகள் நடத்த அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இளை ஞர்கள் இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைத் திருப்புதல் சாலச் சிறந்ததாகும். இக்கால இளைஞர்கள் தீய வழிகளில் நடந்து உட லுக்கும் உயிருக்கும் கேடு செய்கிறார்கள். அதனால் வாழ்க்கை

நலம் கெட்டு, பிஞ்சிலே பழுத்து, முதிரா முன்னர் வெம்பி அழிந் தொழிகின்றார்கள். இக்குறைபாட்டினை நீக்க அவர்கள் விரைதல் வேண்டும். ஒரு சிலர் இதன் நலத்தை அடைய விரும்புகிறார்கள் என்பது உண்மையேயாயினும், விரும்புவதனால் மட்டும் பலன் கிட்டாது; உண்மையாக உழைத்தாகவேண்டும்.

மக்கள் வாழ்க்கையில் ஆரோக்கியம், தேகக் கட்டு, பலம், நீண்டாயுள், ஆபத்துக் காலத்தில் எதிர்க்கும் சக்தி, கஷ்டத்தில் தாங்கும் சக்தி முதலானவைகள் பிரதானமாகும். இவ்வித நலன் களை ஒருங்கே அடையவேண்டுமானால் முதலில் நோயடையாத் தன்மையினைப் பெறல் வேண்டும். உடம்பு சுத்தமானால் மனமும் சுத்தமாயிருக்கு மென்று பெரியோர்கள் கூறி யிருக்கின்றனர். ஆகவே, நோயைப் போக்கவும், நோய் வராமல் தடுக்கவும் உடற் பயிற்சி சிறந்த தொன்றாயிருக்கிறது. சுகவழிகளில் இது தலையாய தெனக் கூறலாம். உடலிற்கு உயர்ந்த பயனை நல்கும் இச்சிறந்த வழியை இளைஞர்கள் பின்பற்றவேண்டும். எல்லோரும் சுகதேகி களாய் — கட்டுடைய காளைகள் போன்று திகழவேண்டும். ஆண் — பெண் அனைவரும் இம்முயற்சியில் முயன்று தைரிய முடையவர்களாய் — ஆபத்துக் காலத்தில் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளக் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். இவ்வித நல்ல உற்சாகத்தினை இம்மகாநாடு உங்களுக்கு அளிக்கு மென்பதில் ஐயமில்லை.

பலசாலிகள் மகாநாடுகள் இரண்டு நடந்திருக்கின்றன. அம் மகாநாட்டிற்கு வழிகாட்டியது நமது ஸமூகம் என்று மிகமிகப் பெருமையோடு நான் கூறுவதைக் கேட்டு நீங்கள் வியப்படைய மாட்டீர்கள். தமிழ்நாட்டில் இவ்வியக்கம் நமது ஸமூகத்திலிருந்து தோன்றியது என்ற முதற்பெருமை நமக்கே உரியது.

இப்போது நமதிளைஞர்களுக்காகத் தனியே இம்மகாநாடு நடத்தப்படுகிறது. ஓர் ஸமூகத்துக்கெனப் பிரித்து நடத்துவதில் அறிஞர்கள் விருப்பங் கொள்ளா ரெனினும் கால நிலை அவ்விதம் செய்யும்படி தூண்டுகிறது. இச்சமூகத்திலிருந்து தோன்றிய இவ் வியக்கத்தின் பலனை இச்சமூக இளைஞர்கள் போதுமானவரை

அநுபவிக்கவில்லை. வேண்டிய வசதியிருந்தும் நமதிளைஞர்கள் உடற் பாதுகாப்பில் அலட்சியம் செய்துவந்திருக்கிறார்கள். சாப்பாடு ஒன்றே எல்லாக் குற்றத்தினையும் பரிகரிக்கப் போதுமானதென்று அநேகர் நம்பிவந்திருக்கிறார்கள். இதிலுள்ள அலட்சிய புத்தி நீங்கி ஆண்மையுள்ள மக்களுடன் ஒப்பிடத்தக்க தகுதி வாய்ந்தவர்களாகச் செய்வதற்கென்றே இம்மகாநாடு நம்மவர்க்கென்று நடத்தப்படுகிறது. உடற் பயிற்சியின் உயர்வைப்பற்றி நமதிளைஞர்கள் இன்னும் சரியாக நன்கறியவில்லை. எனினும், வருங்காலத்து இளைஞர்கள் இதன் மேன்மையை நன்குணர்ந்து இதனாலாகிய பயன் முழுமையும் ஒருங்கே பெறுவார்கள் என்ற நம்பிக்கை மிகுதியும் உண்டு.

அறிவின்மை, நோய், கவலை, பயம், துன்பம், அற்பாயுள் முதலியன எப்போதும் வாழ்க்கையில் குடிகொண்டிருந்தால் அவ் வாழ்க்கையை என்ன வாழ்க்கை என்று கூறுவது! இதனைப் பரிகரிக்கவே இம்மாதிரி முயற்சிகள் வேண்டப்படுகின்றன. இளைஞர்களே! செல்வச் சிறுமிகளே!! இதனை ஓர்ந்து நடப்பது உங்கள் கடமையாகும்.

உ

சிவமயம்.

தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு

வரவேற்புக் கழகத் தலைவர்

ஸ்ரீமான் அ. அழ. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்கள்

பிரசங்கம்.

பெரியோர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

நமது ஸமூக இளைஞர்கள் உடல்நலங் கருதி நடக்கும் இம் மகாநாட்டிற்கு வரவேற்புக் கழகத் தலைவனாக என்னைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்த பெருமை உங்களுடையதேயாகும்.

இவ்வுயர் பதவியில் தலைநிற்க யான் எவ்விதம் அருகனோ அறியேன். ஆயினும் உடல் நலப் பயிற்சிகளை அனுபவத்தில் அமைக்கவேண்டும் என்னும் எண்ணம் மேலெழ, நானே என் அங்கக் கூறுபாடுகளைக் கவனித்து அவைகளை அப்பயசித்துச் சிறந்த பலன்களைக் கைகூடப் பெற்றமையானும் இவ்வரிய விதிகளைப் பிறரும் அப்யசித்துத் தக்க பயன் பெறவேண்டுமென்னும் ஆர்வம் உள்ளெழுந் தென்னைத் தூண்டலினாலேயுமே உங்களை வரவேற்க இப்பதவியை யான் ஏற்றேன்.

பாண்டி நாட்டின் பதினான்கு சிவத்தலங்களுள் ஒன்றாகிய திருப்புத்தூரை மேல்பாலும், நகரத்தாரின் ஏழு கோயில்களினுள்ளே சேர்ந்த இரணியூர், இளையாத்தங்குடி என்ற இரு கோயில்களையும் முறையே மேற்கு, வடமேற்குத் திசைகளினும், ஸ்ரீதேவி சமேத சத்யமூர்த்தி பெருமாள் எழுந்தருளிய திருமய்யத்தைக் கீழ்பாலும், குமரக் கடவுள் எழுந்தருளிய குன்றாக் குடியையும், நேமப் பதியையும் தென்கீழ்த் திசையிலும், பெற்றுத் திகழ்வதும் திருநெல்வேலி, கோடகநல்லூர், ஸ்ரீமத் சுந்தர ஸ்வாமிகளின்

மேன்மையான அருள் சேர பிரதிட்டை செய்யப்பெற்ற ஸ்ரீமீனாக்ஷி சோமசுந்தரர் ஆலயத்தைத் தனதிடத்தே கொண்டதும், ஜெயங் கொண்டார் சதகம், திருமுக விலாசம், தனி விசித்திரக் கவிகள் முதலியன இயற்றிய தெய்வப் புலமை உயர்திரு. பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் தமது கீர்த்தி பரப்பியதும், ஊனையூர் சுப்பிரமணிய பாரதி யவர்களால் திருமதுரை யெனச் சிறப்பித்துக் கூறப் பெற்றதும், தமிழ் நாட்டிலேயே பலசாலிகள் மகாநாட்டை முதல் முதலில் கூட்டப்பெற்ற சிறப்பெய்தியதுமான இக் கீழச்சிவற்பட்டி அளகாபுரியின்கண்ணே தனவைசிய வாலிபர் களின் தேக நலங் கருதி குழுவப்பெற்றுள்ள இம் மகாநாட்டிற்கு அறிவிலும் ஆற்றலிலும் ஆன்ற உங்களனைவரையும், இவ்விரண் டினையும் விரைந்து பெற விரும்பி மிக்க ஆர்வத்துடன் ஈண்டு விஜயம் செய்துள்ள நமது சிறுவர் சிறுமியர் அனைவரையும் ஒருங்கே வரவேற்கக்கூடிய இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகவே கருதி நான் உங்களை மனப் பூரணமாக வரவேற் கிறேன்.

உங்கள் வரவு நல்வரவாகுக!

கடந்த தமிழ்நாட்டுப் பலசாலிகள் மகாநாடுகள் இரண்டு நடந்தபோது அதில் நமதிளைஞர்கள் வேண்டிய அளவு கலந்து கொண்டு தங்கள் திறமையைக் காட்டவில்லை என்ற காரணம் பற்றியே தனித்த முறையில் இம்மகாநாட்டைத் தோற்றுவிக்க அவசியம் ஏற்பட்டது. உடல் நல விஷயத்திலும், அறிவு வளர்ச் சிக்கான துறைகளிலும் நமதிளைஞர்கள் உணர்ச்சியும் — ஊக்கமும் கொண்டு வருவது உண்மை எனினும் தேவைக்குப் போதுமான வரை முயற்சிக்கவில்லை என்பதையும் நாம் அங்கீகரித்தே யாக வேண்டும். இதுபோன்ற மகாநாடுகள் உடல் நல விஷயமான குறைகளை நீக்கத் தூண்டுவதற்கு உதவி செய்யும் என்பதில் ஐய மில்லை. இதனால் இப்போது உடற் பாதுகாப்புக்கான நலன்கள் நமது நாட்டு மக்களிடையே பரவி வருகின்றன என்பதையும் நாம் மறுக்க முடியாது.

இவ் வுடற்பயிற்சி மகாநாட்டின் நோக்கம் என்ன என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். ஆயினும் சிலர் இந்நோக்கத்தில்

மாறுபாடான அபிப்பிராயம் கொள்ளுகின்றனர். மார்பில் யானை ஏற்றுதல்; கல் தாங்குதல்; சங்கிலியை ஒடித்தல்; ஒருவர்க் கொருவர் சண்டையிட்டுக்கொள்ளுதல் போன்ற வேலைகளுக்காகவே இம் முயற்சிகள் செய்யத் தூண்டப்படுகின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள். அக்கருத்தை மாற்றிக்கொள்ளும்படி அவர்களை நான் மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். உடற்பயிற்சி அதற்காக அல்லவென்றும் உடம்பிலுள்ள நோயைப் போக்கிக்கொள்ளவும், நோய்கள் வராமல் தடுத்துக்கொள்ளவும், தேகத்தைக் கட்டுடைய தாக்கிக் கொள்ளவும், எக்காலத்திலும் தேகம் நிர்வாக சக்தியினைப் பெற்றிருக்கவுமே என்று உங்களுக்குக் கூறுகிறேன். ஆரோக்கியம், அழகு, பலம் முதலியவைகளை ஒருங்கே பெறச் செய்யும் தேக முயற்சியே உடற்பயிற்சி என்று மீண்டும் கூறுகிறேன்.

உடலோம்புதற்குரிய பல வழிகளிலும் இவ் வுடற்பயிற்சி முதன்மை பெற்றது என அறிவுலகம் இன்று நமக்குக் கற்பிக்கின்றது; அல்லாமல், அநுபவத்திலும் காட்டிவருகின்றது. உலகில் இப்போது எத்தனையோ விதமான விளையாட்டுக்களை மக்கள் உடற்பயிற்சிக்காகச் செய்துவருகின்றனர். என்றாலும் விளையாட்டுக்கள் யாவும் சம்பூரண உடற்பயிற்சி ஆகாது. இதுபற்றி யூஜின் சாண்டோ கூறும் மொழிகளைக் கீழே கவனிப்போம்.

"விளையாட்டுக்களனைத்தையும், உடற்பயிற்சி என்று நான் கூறமாட்டேன். அறிவுலகம் அவ்விதம் கூறாது. ஒவ்வோர் விளையாட்டும், ஒவ்வோர் பகுதிகளை அன்றிச் சில பகுதிகளை மட்டுந்தான் இயக்க முடியுமென்றும், ஒரே விளையாட்டு உடம்பிலுள்ள எல்லாப் பகுதிகளையும் ஒரே சமயத்தில் இயக்க முடியாதென்றும் அநுபவத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அவைகளைச் சம்பூரணமான — சாஸ்திரோக்தமான பயிற்சிகள் என்று நான் கூறமாட்டேன். அவைகளை உடற்பயிற்சியின்பாற்பட்ட விளையாட்டுக்கள் என்றே கூறுவேன். பாதம் முதல் சிரம் வரையிலுள்ள எல்லா மூட்டுக்களையும், தசைப் பகுதிகளையும், நரம்புப் பிரதேசங்களையும் ஒன்றுகூட விடாமல் அசைத்துத் தொழிற்படுத்தும் சிலாக்கியமான முறைகளுக்கே நான் 'உடற் பயிற்சி' என்ற பெயர் சூட்டுவேன். ஆகவே, விளையாட்டுக்களெல்லாம் சம்பூரண

உடற்பயிற்சி ஆகாது. 'ஐயா! தாங்கள் உடற் பயிற்சி செய்து வருகிறீர்களா?' என்று ஒருவரைக் கேட்டால்—அவர், 'ஆம், நான் டென்னிஸ் விளையாடுகிறேன்' என்று பதில் கூறுகிறார். "உடற் பயிற்சி" விளையாட்டு என்று அநேகர் கருதியிருக்கிறார்கள். உடற்பயிற்சி என்பதற்கு நேரான அர்த்தம் அநேகருக்கு இன்னும் தெரியாதிருப்பதற்கு வருந்துகிறேன். முழுதும் போஷிக்கும் தன்மை வாய்ந்த உணவை யொத்திருக்கிறது உடற்பயிற்சி; குறை பாடுள்ள போஷணையை நல்கும் உணவை யொத்திருக்கிறது விளையாட்டு" என சாண்டோ அறிந்து — அநுபவித்துக் கூறும் உண்மைகள் பொன்போல் போற்றத்தக்கவையாகும்.

உலக மக்களனைவரும் எல்லாத் துறையிலும் முன்னேற்ற மடைவதற்கு முயற்சிக்கின்றனர். அத்தகைய முயற்சிகளினால் அடையும் நன்மைக்கு ஏதுவாயிருப்பது இவ்வுடலமேயாகும். உலக வாழ்க்கையில் நிரந்தரமாகச் சகல இன்பங்களையும் அநுபவித் தற்கு இவ்வுடலே அடிப்படையா யிருக்கின்றது. இதனை நீங்கள் அறிந்தே யிருக்கின்றீர்கள். அறிந்திருந்தும் உடற்பாதுகாப்பு விஷயத்தில் அலட்சியம் செய்துவந்தால் எதிர்பலனை அநுபவிக் காமல் தப்ப முடியாது.

தேகத்தை இயற்கை வழிகளில் நடத்துதல் வேண்டும்; அத னால் வரும் பெரும்பயனை அடைதல் வேண்டும்; என்னும் உண்மை யினை உணர்ந்து அதன்படி நடக்கவேண்டுமென்னும் பாடத்தினைக் கற்பிப்பதே இம்மகாநாட்டின் நோக்கமாகும். "பிணியற்றிருப் பதே — பேரின்பம்" "நோயற்ற வாழ்வே–குறைவற்ற செல்வம்" "நோய் என்பது–இயற்கையின் சாபம்" என்னும் முதுமொழிகள் நமது கவனத்திற்குரியன.

இந்நோயற்ற வாழ்வை நமது பெரியார்கள் இயற்கையிலேயே பெற்றிருந்தார்கள். இயற்கை நியதியின்படியே பிறந்து வளர்ந்து வாழ்ந்தார்கள். கிராம வாழ்க்கை செய்தார்கள். அதனால் அவர் கள் இதற்காகத் தனிமுயற்சிகள் எதுவும் செய்ய அவசியம் நேர வில்லை. கால மாறுபாட்டினாலும், நாகரிக முதிர்ச்சியாகக் கருதப் படும் அநாகரிகச் செயல்களாலும் இப்போது அவ்வாழ்க்கை நலத்

தைத் தனி முயற்சிகளினால் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு வந்திருக்கின்றோம். இப்போது பெரும்பாலும் நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாகவே இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

நமது சந்ததிகள் நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டு வருகின்றன. சுகமும் பலமும் குன்றிவருகின்றன. ஆயுட் காலமும் குறைந்துவருகின்றது. ஆகவே, இப்போதே நாம் இது விஷயத்தில் கண்விழிக்கவேண்டும். வேண்டுவன செய்யவேண்டும். இல்லையேல், சில காலத்தில் மனித குலம் தேய்ந்து மாய்ந்து போகுமோவென ஐயப்படக் காரண மிருக்கிறது. ஆதலினால் சிறிதும் காலந் தாழ்த்தாமல் உடற் பயிற்சியையும் — அதற்கனுகூலமான சுகாதார முறைகளையும் நம் நாடெங்கும் பரப்புதல் வேண்டும். இதுவே இப்போது நாம் செய்யவேண்டிய முதல் வேலை. இவ்வேலையைத் தொடர்ந்து செய்து செயலில் காட்ட வேண்டும். இதன் உண்மையை விளக்குவதே இம்மகாநாட்டின் முக்கிய நோக்கம் என்று மீண்டும் கூறுகிறேன்.

"ஆலயமே காயம் — அறிவே சிவலிங்கம்" "தேகமழியாதிருந்தால் யோகம் — ஞானம்" "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று உடம்பினையா னிருந்தோம்புகின்றேனே" என்று பெரியார்கள் கூறிய செம்மொழிகள், இளைஞர்களே! உடம்பினைப் பாதுகாருங்கள்!! அற்ப ஆயுளில் ஆக்கையைப் போக்காதீர்கள்!!! என்று அறிவுறுத்துகின்றன. ஆகவே, கற்கோட்டையைக் காட்டினும் உயிர் தங்கியிருக்கும் உடம்புக் கோட்டையைப் பலப்படுத்துதல் எவ்வளவு அவசியம் என்று சிந்தியுங்கள்!

பலஹீனமும், நோயும், என்புக் கூடு போன்ற மெலிந்த உருவமும், இளமையிலே வயோதிகத் தோற்றமும், ஒற்றுமையின்மையும், பொறாமையும், வஞ்சகமும், பயங்கொள்ளித்தனமும், சுயநலமும் கொண்ட மக்களையே நமது நாட்டில் பெரும்பாலும் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் தேகமும் மனமும் குறைவுபட்ட அபிவிருத்தியினைப் பெற்றிருப்பதேயாம். பொருளாதாரமும், ஏழ்மையும், தேச நிலையும் மற்றொரு காரணமாக வைத்துக்

கொண்டாலும், அக்குறைபாடுகள் நீங்கப்பெற்றவர்களாகக் கருதப் படுகிறவர்களும் மேற்கூறிய தாழ்ந்த நிலையில் நிற்பதால் அபிவிருத்திக் குறைவினைக் காரணமாகக் கூறுதலே சாலச் சிறப்புடைத்து. ஏழைகள் முன்னேற்றமடைதற்கு பிரபுக்களும் அதிகார வர்க்கமும் முட்டுக்கட்டையா யிருப்பதால் அவர்கள் நலம் பற்றிச் சொல்லத் தேவையே யில்லை.

இக்குறைபாட்டினைப் போக்க — உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்ப — இம்மாதிரிப் பிரசாரங்கள் அவசியத்தினு மவசிய மேயாம். ஏழைகள் பட்டினி கிடந்து சாக, பெற்றோர்கள்—மூதாதைகள் தேடி வைத்த திரண்ட செல்வத்தைப் பொது நலத்திற்குபயோகியாமல் — தானும் அநுபவியாமல் இளம் வயதிலே இறந்துபோகின்ற வாலிபர்களின் கதியை எண்ணிப் பார்த்தால் நமக்கு மிகுந்த விசனம் உண்டாகாமல் வேறென்னதான் செய்யும்? இக்குறைபாட்டினைப் பரிகரிக்க வேண்டுமானால் முதலில் உடல் செம்மை நிலைபெற முயலுதல் வேண்டும். உடல் செம்மை நிலை பெற்றால் மனம் திண்ணியதாகும். திண்ணிய மனத்தால் எண்ணிய தெய்தும்.

தேகப் பயிற்சிச் சாலைகளை நாடெங்கும் அமைத்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். ஒழுக்கங் காத்து உடலோம்பும் முறைகளை அவர்கள் கைக்கொள்ளும்படி செய்தல் வேண்டும். இதற்கு அறிஞர்களும் செல்வர்களும் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்துகொடுத்தல் வேண்டும். அரசாங்கத்தாரும் இதில் சிரத்தை கொள்ளும்படி செய்தல் வேண்டும். மாணாக்கிகளுக்கும் — மாணாக்கர்களுக்கும் பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சிக்கான முழு வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். தேகப் பயிற்சி கட்டாய பாடமாக்கப்படவேண்டும். பள்ளிக்கூடங்களில் இதுவரை நடத்திவந்த 'ட்ரில்' போன்ற அப்பியாசங்களால் இளைஞர்கள் குறித்த பயனை அடையவில்லை என்பது நிச்சயம். அதனை இளைஞருலகம் ருசுப்படுத்திவருகிறதென்பதும் உண்மை. ஆகவே அம்முறை நமக்கு வேண்டாம். ஆண்மையும், பெண்மையும் அளிக்கக்கூடிய அப்பியாசமே நமக்குத் தேவை.

இம்மகாநாட்டில் நடைபெறுகின்ற சொற்பொழிவுகளும், தீர்மானங்களும், பேச்சளவிலும் — எழுத்தளவிலும் பெரிய நன்மைகள் எதுவும் செய்துவிட முடியாது. இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் உண்மையை உள்ளவாறறிந்து அதன்படி நடக்க முயல்வதோடல்லாமல், தங்களைச் சார்ந்தார்க்கும் இதுபற்றிய உண்மைகளை எடுத்தோதி செயலிலும் கொணரும்படி செய்தல் வேண்டும். இதுபோன்ற பற்பல மகாநாடுகள் கூட்டி இளைஞர்களுக்கு உணர்ச்சியும் — உற்சாகமும் அளிக்கவேண்டும். நமது நாட்டில் ஒவ்வொரு இல்லமும் ஆரோக்கிய விடுதிகளாய்ப் பொலிதல் வேண்டும். ஆண் — பெண் இருபாலாரும் அழகுக் கொழுந்துகளாய் — பலத்தின் வேர்களாய் — ஆரோக்கியக் கிளைகளாய்த் திகழவேண்டும். அவர்கள் இவைகளை ஒருங்கே பெறும்படியான சாஸ்திரங்களையும்—ஸ்தாபனங்களையும் உற்பத்தி செய்தல் வேண்டும். இவைகளை எவ்வளவுக்கு விருத்தி செய்கின்றோமோ அவ்வளவுக்குத் தாய்நாட்டின் க்ஷேமம் பெருகி வரும்.

மேல்நாட்டு இளைஞர்கள் இன்று முன்னேறி யிருப்பதற்கும் உடல் நலத்தில் சிறந்து விளங்குதற்கும் முக்கிய காரணம் உடற்பயிற்சி முதலிய சுகவாழ்க்கைபற்றி அங்குள்ளார் செய்துவரும் அரிய முயற்சிகளேயாம். இதுவிஷயத்தில் ஆண்களும் — பெண்களும் அங்கு சமமாய்ப் பங்கெடுத்துக்கொள்ளுகிறார்கள். நாம் என் செய்கின்றோம்? வாளாவிருக்கின்றோம். ஆகவே, உடற்பாதுகாப்புக்கான வசதிகளைச் செய்து தரும் விஷயத்தில் பெண் மக்களும் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். உடல் நலத்தில் பெண்களும் மேம்பாடுடையவர்களா யிருந்தால்தான் அவர்கள் மக்களும் மேம்பாடுடையவர்களா யிருப்பார்கள்.

இம்மகாநாடும், கடந்த பலசாலிகள் மகாநாடுகளும் நமது சமூக மக்கள் முயற்சியால் தோன்றின என்ற புகழ் நமது சமூகத்திற்கே உரியது. இம்மகாநாடுகளால் நமது சமூகமும் சிறப்பாகத் தமிழ்நாடும் கண்விழிக்க ஆரம்பித்திருக்கின்றன. வருங்கால சரிதத்தில் இம்முயற்சி பற்றிய முதற்பெருமை நமது சமூகத்திற்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதுபற்றி முனைந்து வேலை

செய்பவர் எவரேயாயினும் அவர் நம் நினைவில் முதலிடம் பெறத் தகுந்தவர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

எனது பிரிய சோதரி — சோதரர்களே!

முடிவாக ஒன்று கூறுகிறேன் கேளுங்கள் !! வேலை செய்து உண்டு பிழைக்க மனமில்லா திருக்கும் சோம்பேறிகளுக்குச் சோறு போட்டு வளர்க்கும் ஒரு சோம்பேறி ஸ்தாபனத்தை உண்டாக்க முயற்சிப்பதை விட, தங்களுக்குத் தாங்களே உழைத்துப் பொருள் தேடி வயிறு வளர்த்துக்கொள்ளும்படியான ஸ்தாபனங்களை உண்டாக்க முயற்சிப்பதையே அறிஞர்கள் விரும்புகிறார்கள். இம்முயற்சிக்கு ஆதரவளிப்பவர்களையே அவர்கள் போற்றுகிறார்கள். மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான ஸ்தாபனங்கள்தான் அழிவு பெறுமல் என்றும் நிலைத்து நிற்கும்.

பெரியோர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

எனது உள்ளத்தில் தோன்றிய உண்மைகளை உரைத்துவிட்டேன். நல்லதைக் கொள்ளுங்கள்! அல்லாததைத் தள்ளுங்கள்!!! இம்மகாநாடு எமது சமூக இளைஞர்க்கென நடத்தப்பெற்றபோதிலும், பொது மக்கள் நலம்பற்றி அலட்சியம் செய்துவிட்டதென்றும், சுயநலங் கருதிவிட்டதென்றும் ஏனைய சோதரர்கள் கருதிவிடக் கூடாதெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். உலகில் ஒருவர் — ஒரு சமூகம் — ஒரு நாடு — ஓர் நல்ல விஷயத்திற்கு வழிகாட்டியிருக்கின்றன என்ற உண்மையைச் சரித்திர வாயிலாகவும் — அநுபவத்திலும் நாம் நன்கறிவோம். அதற்கனுகூலமாக நடக்கும் இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் தலைவரவர்களையும், போட்டிக்கு வந்திருக்கும் இளைஞர்களையும், பிரதிநிதிகளையும், போட்டிகளில் நியாயம் வழங்க வந்திருக்கும் நியாயாதிபதிகளையும், மற்றுமுள்ள சோதர — சோதரிகளையும் வரவேற்புக் கழகத்தின் சார்பாக முழுமனதுடன் நான் வரவேற்கின்றேன்.

நீங்கள் எல்லோரும் என் மனமார்ந்த நல்வரவேற்பை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வரவேற்புக் கழக அங்கத்தினர் பொருட்டாகவும் உங்கள் பொருட்டாகவும், இம்மகாநாட்டை எழில்பெற நடத்தித் தரும்படி தலைவர், பெரியார்—ரெவரெண்ட் **M.S.** **திருத்துவ தாஸன்** அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன். சுபம்!

குமரன்
பிரஸ், காஞ்சீ.
733-9.